மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் ஹிதழ் : 8
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്റഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜுன் 2010**

ஆண்டுசந்தா ஹிந்ணியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2010 ஜுன்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**கர்த்தர்**
**பூமியிலுள்ள**
**சகல ஜாதிகளிலும்**
**உன்னை**
**மேன்மையாக வைப்பார்.**

உபாகமம் 28 : 1

கர்த்தருடைய தாசன் **திருச்சி பிரபல அட்வகேட் திரு.சபா** தனது மகள் மற்றும் **மகன் சத்யா** ஆகியோருடன் 10.03.2010 அன்று TASOL அலுவலகத்தை பார்வையிட்டு **ஸ்டீபன் கிறிஸ்டோபருடைய துூர தரிசனத்திற்காக** ஜெபித்து, துதித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

### CHIEF EXECUTIVE OFFICER Letter Dated:12.05.2010



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய கிருபையினால் இந்தப் பத்திரிகை உங்கள் கையில் கிடைக்கும்பொழுது எனக்கு திருமண மாகியிருக்கும். தேவனைத் துதியுங்கள். என்னுடைய வாழ்க்கையில் இது ஒரு முக்கிமான ஆரம்பம். தயவுசெய்து உங்கள் ஜெபங்களில் என்னை தாங்குங்கள்.

தேவனுடைய மகிமைக்கென்று ஐந்து ஆலயங்கள் ஒரிஸா மாநிலத்தில் வெற்றிகரமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவாதி தேவனைத் துதியுங்கள்.

மேலும் தமிழ்நாட்டில் இந்த மாதத்தில் நடைபெறவிருக்கும் ஆலய பிரதிஷ்டைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய கிருபையினால் **"100-கிராம ஊழியம்"** மற்றும் **"இயேசுவை விரும்புவோர் முகாம்"** தமிழ்நாட்டில் பற்பல ஊராட்சி ஒன்றியங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அநேகர் இயேசுகிறிஸ்துவுக்குள் வந்து கொண்டிருக்கிறார்கள். தேவனைத் துதியுங்கள்.

எனது தந்தை சகோ. P.T.கிறிஸ்டோபர்(நிறுவனர்-TVGM) அவர்களின் வெளிநாட்டு ஊழியப் பிரயாணங்களுக்காக ஜெபியுங்கள்.

உங்கள் ஜெபவிண்ணப்பங்களை அவ்வப்போது எங்களுக்கு அனுப்பி வையுங்கள். கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்யும்படியாக ஜெபிக்கிறோம்.

**தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

வாக்குத்தத்த செய்தி

# கர்த்தர் . . . உன்னை மேன்மையாக வைப்பார்.

உபாகமம் 28 : 1

**2010 ஜுன் மாதம்** கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே!

கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் : **உபாகமம் 28 : 1**

**கர்த்தர் உன்னை**

**மேன்மையாக வைப்பார்.**

இன்று மனிதர்கள் பலரும் இவ்வுலகில் பிரபலமடையவும், செல்வந்தராகவும், நல்ல பெயர் எடுக்கவும் சந்தர்ப்பங்களை தேடுகிறார்கள். தங்கள் விருப்பத்தை அடைய எல்லா வழியையும் தேடுகிறார்கள். ஆனால் பெருமளவு அவர்களுக்கு வருவது தற்காலிக மானதாகவும், சில நேரங்களில் கஷ்டங்கள் இணைக்கப்பட்டதாகவும் இருக்கும். ஒரு திசையில் அவர்கள் வெற்றி பெற்றதாக எண்ணுகிறார்கள். ஆனால் பலமடங்கான தோல்வியில் முடிந்து விடுகின்றனர். இறுதியில் அவர்கள் வெறுப்படைந்து, அவர்களால் தீர்க்கமுடியாத சிக்கலான பிரச்சனைகளில் வீழ்ந்து விட்டதாக நினைக்கின்றனர்.

இன்று உங்கள் வாழ்வில் வெளிவர வழியில்லாத பிரச்சனையில் நீங்கள் நின்று கொண்டிருக்கலாம். எத்திசை நோக்கினாலும் எந்த தீர்வும் இல்லை. ஆனால் இப்போதும் நீங்கள் ஒன்று செய்யலாம். கர்த்தரை நோக்கிப் பாருங்கள். **இம்மாதம் அவர் உங்களை உயர்த்துவார்.**

தேவன் உங்களை உயர்த்த விரும்புகிறார். உங்களை உயர்த்த வேண்டும் என்பது அவரது விருப்பம். உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க் கையில் உயர்த்த விரும்புகிறார். படிப்பில் உங்களை உயர்த்த விரும்பு கிறார். வேலையிலும், செய்யும் வியா பாரத்திலும் உங்களை உயர்த்த விரும்புகிறார். உங்கள் எல்லா முயற்சி களிலும் தோல்வியோ நஷ்டமோ ஏற்ப்பட்டதால் கவலை கொள்ளலாம். இம்மாதம் கர்த்தரை நம்புங்கள். நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் அவர் வெற்றியைத் தருவார்.

வெற்றி என்பது இந்த நிலையில் கடினமான ஒன்றாக உங்கள் வாழ்வில் இருக்கலாம். ஆனால் இது தேவனுக்கு லோசான காரியம். ஒரு வேளை நீங்கள் கர்த்த ரிடத்தில் காத்திருக்க வேண்டியது இருக்கலாம். ஆனால் தேவனுக்கு ஒன்றும் மிகவும் கடினமானதல்ல. ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்து, செல்வந்தனாக்கினார். தாவீதை இஸ்ரவேலருக்கு ராஜாவாக்கினார்.

அடிமையாக கொண்டு செல்லப்பட்ட யோசேப்பை உயர்த்தி, நாடு முழுமைக்கும் அதிகாரியாக்கினார். அதைப் போலவே நீங்களும் தனிமையாக, பெலவீனமாக, நம்பிக் கையற்றதாக உணரலாம். ஆனால் தேவனுக்கு எதுவும் கடினமானதல்ல. உங்கள் சுயத்தின்புத்தியின்மேல் சாராமல் தேவனை முழு இருதயத் தோடும் நம்புங்கள்.

**"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனைக் கூட்டார்"**

என்று நீதிமொழிகள் 10:22ல் வாசிப்பதுபோல், தேவன் உங்களை ஆசீர்வதிக்க முடிவெடுக்கும்போது, உங்களுக்கு கஷ்டங்களோ, வேதனை களோ உங்கள் ஆசீர்வாதத்தோடே இருக்காது. மேலும் நீங்கள் கர்த்தரிடத் திலிருந்து பெற்ற ஆசீர்வாதத்தை ஒருவரும் எடுத்து கொள்ள முடியாது.

நம் தேவன் உங்களை புதிய உயரத்துக்கு உயர்த்தி, உபா.28:1 முதல் 14 வரையிலும் வாசிப்பது போல, முழுமையாக ஆசீர்வதிக்க விரும்பு கிறார். **நீங்கள் பெறும் முழுமையான ஆசீர்வாதங்கள் எவை?**

1. நீ பட்டணத்தில் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய் . உபாகமம் 28 : 3
2. உன் கர்ப்பத்தின் கனி ஆசீர்வதிக் கப்பட்டிருக்கும். உபாகமம் 28 : 4
3. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டி ருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக் கப்பட்டிருப்பாய். உபாகமம் 28 : 6
4. ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப் போவார்கள். உபாகமம் 28 : 7
5. கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உபாகமம் 28 : 8
6. பூமியின் ஜனங்களெல்லாம் உனக்கு பயப்படுவார்கள். உபா. 28:10
7. கர்த்தர் உனக்கு பரிபூரண நன்மை கட்டளையிடுவார். உபாகமம் 28 : 11
8. நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்கா திருப்பாய். உபாகமம் 28 : 12
9. கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். உபாகமம் 28 : 14

ஆனால் நீங்கள் சில காரியங்களை செய்ய வேண்டும்.

**1. கர்த்தரின் சித்தத்துக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.**
**2. உங்கள் முழு இருதயத்தோடும் தேவனுக்கு கீழ்படியுங்கள்.**
**3. உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரைத் தேடுங்கள்.**
**4. தேவனிடத்தில் அவருடைய தயவை கேளுங்கள்.**
**5. தேவனுக்கு நன்றி செலுத்தும் மனப்பான்மையை கொண்டிருங்கள்.**

**முதலாவது: "ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்"** என்று 1பேதுரு5:6ல் வாசிப்பதுபோல் நீங்கள் உங்களை தாழ்த்த வேண்டியது அவசியம். **தேவன் உங்களை உயர்த்துவதற்கு தாழ்மை என்ற கருவி தேவை.**

நீங்கள் உங்களை தாழ்த்துவது தேவை. இயேசு நமக்கு முழுமையான உதாரணம். அவர் சிலுவையின் மரணம் வரை தம்மை தாழ்த்தினார். ஆகையால் பிலிப்பியர் 2:5-11ல் நாம்

வாசிப்பதுபோல் பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார்.

தேவனின் வல்லமை உங்களை உயர்த்துவதற்கு நீங்கள் உங்களை தாழ்த்த வேண்டும். **“கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்”** என்று யாக். 4:10ல் வாசிப்பது போல உங்களை தாழ்த்தும் போது அவர் உங்களை உயர்த்துவார்.

**இரண்டாவது:** உபாகமம் 28:1ல் வாசிப்பது போல் **கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்படிய வேண்டும்.** நீங்கள் பிள்ளைகளான படியால் உங்களை ஆசீர்வதிக்க அவர் விரும்புகிறார். ஆனால் அவர் கட்டளைக்கு கீழ்படிய வேண்டுனெ எதிர்பார்க்கிறார். கர்த்தர் உங்களை எல்லாருக்கும் மேலாக உயர்த்தும்படி விரும்புகிறார். ஆனால் நீங்கள் தேவனுக்கு முழு இருதயத்தோடு கீழ்படிய வேண்டும்.

**மூன்றாவது:** நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தேட வேண்டும். “**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்**” என்று மத்தேயு 6:33ல் வாசிப்பது போல் நீங்கள் அவருடைய ராஜ்யத்தை தேடும்போது மற்றதெல்லாம் உங்களுக்கு கூடுதலாக கொடுக்கப்படும்.

**நான்காவது: “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்.”** என்று மத்தேயு 7:7, 8 வசனங்களில் வாசிப்பதுபோல், நாம் தேவனிடம் கேட்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நீங்கள் தேவனிடத்தில் கேட்கும்போது அவர் உங்கள் தேவைகளை சரியாக தருவார்.

ஐந்தாவது: **நன்றி செலுத்தும் இருதயம் உங்களுக்கு தேவை.** ஒரு ஆசீர்வாதத்தை பெறுவதற்கு முன்னும், பின்னும் அல்லது நீங்கள் ஒரு ஆசீர்வாதத்தை பெறாத போதும் தேவனுக்கு நன்றி சொல்லும் மனப் பான்மையை நீங்கள் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

நீங்கள் இவைகளெல்லாம் செய்து கர்த்தருக்குக் காத்திருக்கும் போது அவர் உங்களுக்கு புதுபெலனைத் தருவார். நீங்கள் அவருடைய மகிமைக்காக உயரப் பரப்பீர்கள்.

**பக்தன் பாடுகிறார் :**

**கர்த்தருக்கு காத்திருந்து**
**கழுகுபோல் பெலனடைந்து**
**செட்டைகளை அடித்து**
**உயரே எழும்பிடுவாய்**
**புதுபெலன் அடைந்திடுவாய் - நீ**
**புதுபெலன் அடைந்திடுவாய்.**

உங்கள் விசுவாசத்தை தொடர்ந்து அறிக்கை செய்து, இப்பாடலை பாடுங்கள். பாடிக் கொண்டே இருங்கள்.

**கர்த்தர் உங்களை**
**மேன்மையாக வைப்பார்.**

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

# பெரம்பலூர் - வேப்பந்தட்டை யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2010 ஜுன் 21** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுன் 25** வெள்ளி இரவு 10 மணி முடிய **பெரம்பலூர் – வேப்பந்தட்டை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 ஜுன் 21** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2010 ஜுன் 25** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2010 ஜுன் 21 - 25 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**B.C.I. சர்ச்**
**கிருஷ்ணாபுரம் & போஸ்ட்**
**வேப்பந்தட்டை தாலுகா**
**பெரம்பலூர் மாவட்டம். 621 116.**
**செல்: 9790471615**

**நன்றி** : உவி செய்ய முன் வந்த **பாஸ்டர் பர்னபாஸ், பாஸ்டர் லூக்காஸ்** ஆகியோருக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், 100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# கரூர் மாவட்டம் - தோகைமலை யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

## நாள்: 26.04.2010 – 30.04.2010



கர்த்தருடைய கிருபையால் கரூர் மாவட்டம் - தோகமலை யூனியனில் 26.04.2010 முதல் 30.04.2010 வரை **“100 கிராம ஊழியம்”** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசி நாள், கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை காவல்காரன்பட்டி பிரதரன் அசெம்பிளி சர்ச் **Bro. பால் சடையன்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ் நாட்டின் 14 மாவட்டங்களிலிருந்து 55 ஊழியர்கள் கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் தோகமலை யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சகோதரி **சேவரசு**(லண்டன்) அவர்கள் இந்த ஜெபத்தில் தனது சாட்சியை கூறினார்கள். சகோதரி **சாந்தி ஜோயல்** தேவசெய்தி கொடுத்தார்கள். **சகோ. ஜான் ராஜசேகரன்** ஆடிட்டர் அவர்கள் சில குறிப்புகளைச் சொல்லி ஜெபத்திலே நடத்தினார்கள்.





பின்பு ஊழியர்கள் 11 குழுவாக பிரிந்து தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு கிராமங்களுக்குள் சென்று, **5** நாட்கள் கிராமங்களில் தங்கி வீடு வீடாக சென்று யோவான் சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதி, சிலுவைக்கொடி இவைகளை இலவசமாக கொடுத்து ஊழியம் செய்தார்கள்.

கடைசி நாளில் ஊழியர்கள் முன்பு கூடிய இடத்திலேயே ஒன்றுகூடி கர்த்தர் கிராமங்களில் தங்களை எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாகக் கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். சகோ. P.T.கிறிஸ்டோபர் ஊழியர்களை ஜெபத்தில் நடத்தினார்கள். சகோ.நெல்லைக்குமார் தேவசெய்தி கொடுத்தார்கள். சகோ. பால் சடையன் அவர்கள் ஜெபித்து, ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள். பின்பு ஊழியர்கள் யாவரும் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற TVGM ஆண்டுவிழா ஸ்தோத்திரக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்த ஊழியத்தின் போது 10310 சுவிசேஷப் புத்தகங்கள், 18,000 கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள் கிராமங்களில் வழங்கப்பட்டன. 184 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து, தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பக் கேட்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 : சகோதரி கிரேஸ் பத்மா, எஸ்தர் பேபி, மேரி மீனா, அபியேல், தேவபாக்கியம்**

நாங்கள் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து இயேசுவே ஆண்டவர் என்பதை சொன்னோம். ஒரு சிலர் கேட்கவில்லை. அநேகர் ஏற்றுக்கொண்டார்கள். ஒரு மனிதன் எங்களை போ. . போ நீயும் வேண்டாம், உன் புத்தகமும் வேண்டாம் என்று நாயை விரட்டுவது போல எங்களை பேசி விரட்டினான். ஆனாலும் நாங்கள் அந்த மனிதனிடம் வீணாக பேசாதீர்கள். உங்களுக்கு வேண்டாம் என்றால் போய்விடுகிறோம். அதற்காக இப்படியெல்லாம் பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டு கடந்து வந்தோம். மொத்தம் 1500 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 : சகோதரி விமலா தாஸ், மல்லிகா, சாந்தி, தெபோராள், கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் சென்ற 10 கிராமங்களில் யாவரும் விருப்பத்துடன் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு, சத்தியத்தைக் கேட்டார்கள். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 : சகோதரி ஜோதிமணி, கஸ்தூரி, மரியாள், எஸ்தர், கிளமெண்ட்ஸ்மேரி.**

நாங்கள் கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, நற்செய்தியை அறிவித்தோம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். ஒரு போலீஸ்காரர் எங்களை விசாரித்தபோது, அவருக்கு யோவான் புத்தகம் கொடுத்து, **இயேசுவை ஆண்டவர்** என்று சொன்னோம். மொத்தம் 1125 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 : சகோ.பாபு சாலமோன், ஸ்டீபன் ராஜ், அன்பு, யோசுவா, இஸ்தாக்கி.**

நாங்கள் **எட்டப்பநாயக்கன்பட்டி**யில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, 2 போலீஸ் அதிகாரிகள் எங்களிடம் வந்து என்ன செய்கிறீர்கள் ? எங்கிருந்து வருகிறீர்கள் ? என்று விசாரித்தார். நாங்கள் இந்த கிராமங்களில் இயேசுவைப் பற்றி புத்தகங்களைக் கொடுத்து ஜெபித்துவிட்டு செல்லும்படியாக வந்தோம் என்று கூறினோம். அவர்கள் வேறு ஏதும் சொல்லாமல் போய்விட்டார்கள். தொடர்ந்து ஊழியம் செய்தோம். மொத்தம் 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 : சகோ.சிவக்குமார், பீட்டர், ஜெபமலைநாதன், இஸ்ரவேல், சரவணன்.**

நாங்கள் கிராமங்களில் நடந்து திரிந்து வீடுவீடாக சுவிசேஷம் அறிவித்து, யோவான் புத்தகம் கொடுத்தோம். அநேகர் வாஞ்சையுடன் கேட்டார்கள். **ரெட்டியபட்டி** கிராமத்திற்கு செல்லும்போது ஒருவரிடம் அய்யா ரெட்டியபட்டி எவ்வளவு துாரம் என்று கேட்டோம். அது கொஞ்சதுாரம் தான் நடந்து போங்கள் என்று சொல்லி என்ன விஷயமாகப் போகிறீர்கள் என்று கேட்டார். ஆண்டவர் இயேசுவைப் பற்றி சொல்லப் போகிறோம். உங்களையும் இயேசு நேசிக்கிறார் என்றோம். உடனே அவர் தன் காலில் இருந்த செருப்பை கழட்டி விட்டி, கை கட்டி பயபக்தியுடன் எங்கள் முன் அமைதியாக நின்றார். இவருக்கு சுவிசேஷம் சொல்லி ஜெபித்தோம். அன்புடன் ஏற்றுக் கொண்டார். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 : சகோ.சூசைமாணிக்கம், பால்ராஜ், தாவீது, வின்சென்ட்.**

பில்லூார் ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஊர்நாயக்கன்பட்டி யில் எங்களை செருப்பு போட்டுக் கொண்டு ஊருக்குள் வரக்கூடாது என்று கூறினார்கள். ஆனாலும் கர்த்தருடைய உதவியினால் செருப்பு போட்டுக் கொண்டே சென்று சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்தோம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் கர்த்தருக்காக ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 : சகோ.மாற்கு மாரியப்பன், மகாராஜன், நோவா, தானியேல், ஜான் டேனியல்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் யாவரும் சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டார்கள். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். எங்களுக்கு எதிர்ப்புகளும் இல்லை. வரவேற்பும் இல்லை. மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 : சகோதரி லூாயிஸ் அம்மாள், அந்தோணி மேரி, அமிர்தம், சீலா, ரோணிக்கம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் எந்த தடையும் இல்லாமல் சுவிசேஷப் புத்தகம் கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார். **குமார்** என்பவர் பிசாசின் பிடியில் சிக்கி பயந்ததினால் 15 நாட்களாக ஆகாரம் சாப்பிட முடியால் கஷ்டப்பட்டு, எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டார். நாங்கள் ஜெபித்த போது, கர்த்தர் அற்புதம் செய்தார். சாத்தானின் கட்டுகள் மாறி காய்ச்சல் குறைந்து சாப்பிடுவதற்கு கர்த்தர் உதவிச் செய்தார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 : சகோதரி எஸ்தர், அன்னக்கிளி, ஜெபமணி அம்மாள்.**

நாங்கள் 9 கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்து, வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். எல்லோரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு, நாங்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டார்கள். அநேகருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1135 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 : சகோ.பிரேம் ஆனந்த், அந்தோணி, ஜான்பிரிட்டோ, ஜோசப் முரளிதரன், எபிநேசர், சகோதரி பிச்சையம்மாள்.**

மேலாவளியூர் கிராமத்தில் ஊழியம் செய்தபோது, ஒருவர் மதமாற்றம் செய்ய வந்தீர்களா ? எங்கிருந்து வருகிறீர்கள் ? என்று கேட்டார். நாங்கள் இயேசுவைப் பற்றிக் கூறி அவரைப் பற்றிய புத்தகம் கொடுத்து விட்டுப் போக வந்தோம். மதம் மாற்றம் செய்ய வரவில்லை என்றோம். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11:சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, லீதியாள், ஞானசெல்வி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, யாரும் வேண்டாம் என்று சொல்லாமல் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். சிலர் எங்களை ஜெபிக்கும்படி கேட்டார்கள்.

அவர்களுக்காக ஜெபித்தோம். நாங்கள் கடந்து சென்றுக் கொண்டிருந்தபோது, 4 பெரிய நாய்கள் பயங்கரமாக குலைத்துக் கொண்டு கடிக்க ஓடி வந்தது. அங்கிருந்த வாலிபர்களிடம் நாய்களை துரத்துங்கள் என்றோம். அதற்கு அவர்கள் இந்த ஊருக்கு வரக்கூடாது, போய் விடுங்கள் என்றனர். நாங்கள் வேறு வழியாக சென்று விட்டோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 1110 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## 2010 மார்ச் மாத
## இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை




கர்த்தருடைய கிருபையினால் விருதுநகர் மாவட்டம் - ராஜபாளையம் யூனியனில் 10.04.2010 சனிக்கிழமை அன்று இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது. இம்முகாம் நடைபெறுவதற்கு சாலேம் அசெம்பிளி சபையின் பாஸ்டர். ஆபிரகாம் அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்கள்.

இம்முகாமில் 8 பேர் ஆர்வடமுடன் வந்து கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவே மெய்யான கடவுள் என்பதை வேதாகமத்தின் ஆதாரங்களுடன் விளங்கி சொன்னபோது ஏற்றுக்கொண்டு, தங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். இவர்களைப் பற்றி தனித்தனியே விசாரித்து, அவர்களுடைய தேவைகளுக்காக ஜெபித்தோம். பாஸ்டர் ஆபிரகாம் இவர்களுக்கு புதியஏற்பாடு கொடுத்தார்கள். சபையின் சார்பாக மதிய உணவும் வழங்கினார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## 2010 ஜுன் மாத
## இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : காஞ்சிபுரம் யூனியன் : உத்திரமேரூர்

நாள் : 12.06.2010 நேரம் : காலை 9 மணி

### கூடுமிடம்

**பாஸ்டர் ஜேக்கப் செல்லமுத்து**

**பெனியேல் சர்ச்**

**107, மெயின் ரோடு, எடமச்சி கிராமம்**

**பொற்பந்தல் போஸ்ட், உத்திரமேரூர் தாலுகா,**

**காஞ்சிபுரம் மாவட்டம். 603 107.**

**செல் : 99437 05069.**

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2010 ஏப்ரல் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 ஏப்ரல் மாத ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற்றன.

பல மாதங்களாக ஜெபித்து அஞ்சுகிராமம் ஸ்டெல்லாஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடத்தப்பட்ட 100-கிராம ஊழிய தரிசன முகாமை கர்த்தர் ஆசீர்வதித்தார். அநேக ஜெப பங்காளர்களை கர்த்தரே எழுப்பித் தந்தார். அநேகர் ஊழிய தரிசனத்தைப் புரிந்து கொள்ளவும், தாங்க முன்வரவும் கர்த்தர் கிருபை செய்தார். தரிசனமுகாமை தங்கள் பள்ளியில் வைத்து நடத்த அனுமதியளித்த பள்ளித் தாளாளரையும், அவரது மகனையும், சுற்று வட்டார சபைகளில் அறிவிப்புக் கொடுத்து உதவிய சபைப் போதகர்களையும், அதிகமாக எங்களுடன் உழைத்த Rev. பிரசாத், Rev.செல்வம் மற்றும் Rev. வில்சன் குடும்பத்தினரையும், சகோ. ஜோ, சகோ.ஜஸ்டின் யாவரையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

ஏப்ரல் 18ம் தேதி சரல்கோட்டை சி.எஸ்.ஐ. சபையில் அறிமுகப்பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஒத்துழைப்புக் கொடுத்த சபை குருவானவர் அவர்களையும், செயலர் மற்றும் கமிற்றியையும், உபசரித்த டீக்கனார் குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. தேவனுக்கே மகிமை.

கிறிஸ்துவின் பணியில்,
N.ஷோபனா இவாஞ்ஜலின்.

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

# TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

கர்த்தர் ... உன்னை மேன்மையாக வைப்பார். உபாகமம் 28:1

## நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை

| நடு இரவு ஜெபம் | மறு நாள் துதி ஆராதனை |
|---|---|
| **நாள் :** **31.05.2010** திங்கள் | **நாள் :** **01.06.2010** செவ்வாய் |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12 மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

## நடைபெறும் இடம்

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

**சபை பாகுபாடின்றி யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்!**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி அன்னபூரணம்.**

என் மகன் துரைராஜ் 2 வருடமாக மனநிலை பாதிக்கப்பட்டவனாயிருந்தான். மிகவும் மனவருத்தம் அடைந்தோம். மகனுக்கு கர்த்தர் நல்ல சுகம் தந்தால் 100-கிராம ஊழியம் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தோம். கர்த்தர் மகனுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. சாமுவேல், கோவை.**

கர்த்தர் தங்கள் ஊழியர்களின் ஜெபத்தைக் கேட்டு மகளுடைய இழுப்பு வியாதியையும், மருமகனுடைய கால் வலியையும் குணமாக்கினார்.

**சகோதரி ஸ்டெல்லா ஸ்டான்லி, கரூர்.**

**'அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்'** என்ற பத்திரிக்கையின் வாக்குத்தத்தம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு எனக்கு ஒரு பள்ளியில் தையல் ஆசிரியர் வேலை கிடைக்க செய்தார். மேலும் என் கணவருக்கு முதுகில் ஆப்ரேஷன் இல்லாமலேயே அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி மெபாராணி, க.குமரி.**

நான் கடந்த 2009 செப்டம்பர் மாதம் வாதநோயால் மிகவும் கஷ்டப்பட்டேன். அப்பொழுது தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்து பதில் எழுதியிருந்தீர்கள். கர்த்தர் எனக்கு பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோதரி லெட்சுமி, நாமக்கல்.**

என் கணவர் இறந்து விட்டார். அவரது சம்பளம் மற்றும் பென்ஷன் புக் கிடைக்க ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ரூ.5600/- சம்பளமும், பென்ஷன் புக்கும் கிடைக்கச் செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. சுரேஷ், பெரம்பலூர்.**

நான் வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். பொருளாதார தேக்க நிலை காரணமாக அரபு நாட்டிலிருந்து வேலை இல்லையென ஊருக்கு அனுப்பி விட்டனர். சீக்கிரத்தில் நல்ல சம்பளத்தில் வெளிநாட்டில் வேலை கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். எனக்கு மஸ்கட்டில் வேலை கிடைத்துள்ளது. தேவனுக்கே மகிமை.

**பிரியமானவர்களே!** *இயேசுகிறிஸ்து பட்சபாதமுள்ள தேவன் அல்ல. இவர்களுக்கு அற்புதம் செய்த இயேசு கட்டாயம் உங்கள் காரியங்களிலும் அற்புதம் செய்வார். எனவே கவலைப்படாதீர்கள். இன்றே உங்கள் ஜெபவிண்ணப்பங்களை எங்களுக்கு எழுதுங்கள். நீங்களும் எங்களோடு இணைந்து ஜெபியுங்கள். இயேசுகிறிஸ்து கட்டாயம் உங்கள் வாழ்விலும் அற்புதங்களைக் காணச் செய்வார். நீங்களும் தேவனுக்குச் சாட்களாயிருப்பீர்கள்.*

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING

## TASOL - திட்டத்தில் உங்கள் பங்கு என்ன?

TASOL என்பது **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு** கர்த்தர் சிறுவயது முதல் கொடுத்த ஒரு **தரிசனம்** ஆகும். அதன் பிரதானமான நோக்கமானது, நம் தேசத்தில் கூடாரம் செய்பவர்களாக வேலை செய்யும் **உயர்நிலை கிறிஸ்தவ தலைவர்களை** ஏற்படுத்துவதாகும்.

இன்று பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் படித்து முன்னேறி **டாக்டர், பொறியாளர்** போன்ற உயர்பதவியில் வரவேண்டுமென விரும்புகின்றனர். பல கிறிஸ்தவர்களின் மனநிலை ஒரு வசதியான கட்டத்திற்குள் வேலை செய்வதிலேயே உள்ளது. பலருக்கு இந்த வசதி என்பது வெளிநாட்டில் வேலை செய்வதிலேயேயுள்ளது. ஆனால் நாம் வேதத்தில் வாசிப்பதுபோல் நெகேமியா, அரசனின் அதிகாரியாக இருக்கும்போது, எருசலேமின் மதில்களை மறுபடியும் கட்டுவதில் அக்கரையுள்ளவராயிருந்தது போல, நாமும் நமது நாட்டின் மேல் அக்கரை கொள்ள வேண்டும். நெகேமியா இந்த வசதியான கட்டத்திற்குள்ளேயே இருப்பதை தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர் இந்த வசதியான கட்டத்தினின்று வெளியே வர விருப்பம் கொண்டு, எருசலேமின் மதில்களை கட்டினார். கர்த்தர் அவருக்கு வெற்றியை அருளினார்.

இந்த வேளையில் நாம் எங்கே உள்ளோம்? பின்தங்கி உள்ளோமா? மத்தேயு 9:17ல் **"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்"** என்று இயேசு சொன்னார். ஆகவே நாம் கவனமாக அவரது இராஜ்யத்தின் கூடாரம் செய்வர்களாக ஏதாவது ஒரு விதத்தில் வேலை செய்ய, நமது உழைப்பை நாம் கொடுக்க வேண்டும்.

TASOL ன் நோக்கம் உயர்நிலை அதிகாரியாக வர ஆர்வமுள்ள **புத்திக்கூர்மையுள்ள** ஏழை எளிய பிள்ளைகளை பயிற்றுவித்து, பொருளாதார உதவி செய்து, நெகேமியாவைப் போல் **கிறிஸ்துவுக்கு சாட்சியாக நிலைநிறுத்துதல்** ஆகும்.

இந்த மகத்துவமான திட்டத்திற்காக முதல் கட்டமாக சில ஏக்கர் நிலம் வாங்க **விசுவாசத்தில்** திட்டமிட்டிருந்தோம். 2010 டிசம்பருக்குள் இந்த நிலத்திற்காக ரூ. 30 லட்சம் தவணை முறையில் செலுத்த வேண்டும்.

இந்த தரிசனத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் இதைக் குறித்ததான ஒரு பாரத்தை கொடுப்பாரானால், உங்கள் உயர்ந்த காணிக்கையினால் தாங்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**ரூபாய் 1 லட்சம் கொடுக்கக்கூடிய 30 பேர்கள் தேவை!**

**(அல்லது)**

**தங்களால் இயன்றதை கொடுக்கக்கூடியவர்கள் தேவை!**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

**P.T.** கிறிஸ்டோபர், நிறுவனர் **TVGM.**

## திருச்சி - TVGM சிறுவர் இல்லம்



*2010 ஏப்ரல் மாதத்தில் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த சகோதரி சேவரசு, ஷாரோன், மாலினி இன்ப செல்வன் ( ஈஸ்டர் உணவு ) விமலா சிவப்பிரகாசம் ( ஷர்மின் பிறந்தநாள் ), திலகவதி ( கணவர் நினைவு நாள் ) சகோ.ராபின்சன் ( பிறந்தநாள் ), சகோ. நடராஜன் ( மகள் பிறந்த நாள் ) , சகோ. நடராஜன் ( மகன் திருமணநாள் ) சகோ. டேனியல் ( தலீத்தாள் நினைவுநாள் ) ஆகியோருக்கு TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் சார்பாக நன்றி கூறுகிறோம். **கர்த்தர் தாமே இவர்களை ஆசீர்வதிப்பாராக!***

## TVGM தலைமை அலுவலக சகோதரி ஷோபியா திருமண நாள் : 03.05.2010



TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் தேவசெய்தியளித்து, திருமணத்தை நடத்தி வைத்தார்கள். TVGM அலுவலக சகோதர, சகோதரிகள் மற்றும் சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவரும் கலந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார்.

**கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த தரிசனத்தின்படி விசுவாசத்தில் ஜெபவீட்டைக் கட்டி வரும் இவர்களுடைய விசுவாசத்தை கர்த்தர் வர்த்திக்கப் பண்ணும்படியாக ஜெபியுங்கள்.**



அரக்கோணம் - மேல்ப்பாக்கம்



வேடச்சந்தூர் - புதுரோடு



திண்டிவனம்



திருச்சி - வடுகர்பேட்டை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 ஏப்ரல் மாதம் திருவள்ளூர், காஞ்சி, திருவண்ணாமலை, திண்டிவனம், விழுப்புரம், சேலம், திண்டுக்கல், சாத்தூர், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பல மாவட்டங்களில் 21 கிராமங்களை பார்வையிட்டு ஊழியர்களோடு ஐக்கியம் கொண்டு ஜெபிக்கவும், அவர்களுடைய விசுவாசத்தை கேட்டறியவும் கர்த்தர் கிருபை செய்தார்.

21 கிராமங்களில் உங்கள் பார்வைக்காகவும், ஜெபத்திற்காகவும் 4 ஜெப வீட்டின் படங்களை வெளியிட்டுள்ளேன். இவர்கள் மாத்திரமல்ல, நாங்கள் பார்வையிட்ட ஒவ்வொரு ஊழியர்களும், ஒவ்வொரு விதமான தேவைகளோடு தேவசமுகத்தில் உபவாசத்தோடும், ஜெபத்தோடும் காத்திருக்கிறார்கள்.

ஆனாலும் எங்களால் பார்வையிடவும், ஜெபிக்கவும் முடிகிறதே தவிர, அநேக ஊழியர்களுக்கு ஒரு ரூபாய் கூட நாங்கள் உதவி செய்ய முடியவில்லை. கர்த்தரின் சித்தப்படி ஒரு சில கிராமங்களை மட்டும் தெரிந்தெடுக்கவும், ஜெபவீடு வேலைகளை முடித்து பிரதிஷ்டை செய்யவும் கர்த்தர் கிருபை செய்து வருகிறார்.

ஆதலால் கர்த்தருக்குச் சித்தமானவர்களை புதிது புதிதாக எழுப்பும்படி ஜெபியுங்கள். ***முடிந்தால் நேரடியாக பார்வையிட்டு உதவுங்கள்.***

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** சகோ. ஸ்டீபன் திருமணத்திற்காக ஜெபித்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள். ஜுன் 5 (சனிக்கிழமை) கோடாவிளை வரவேற்பு நிகழ்ச்சிக்காக ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** ஒரிசா மாநிலம் - கந்தமால் மாவட்டத்தில் **குருத்தன்கோடு** கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஜெபவீட்டின் பொருளாதார தேவை சந்திக்கப்பட ஒரு ஸ்பான்சரை கர்த்தர் கிருபையாக கட்டளையிடும்படி ஜெபியுங்கள்.

**புதன்:** தமிழ்நாட்டில் ஜுன் மாதம் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் 4 ஜெப வீட்டிற்காக கர்த்தரைத் துதியுங்கள். இன்னும் 5 கிராமங்களில் ஜெபவீடு கட்டப்பட்டு வருகிறது. பொருளுதவியினால் தாங்கக்கூடிய கர்த்தருடைய பிள்ளைகள் தானாக முன்வர ஜெபியுங்கள்.

**வியாழன்:** 2009 - 2010 நிதியாண்டு வரவு, செலவு கணக்கு தணிக்கை செய்து முடிக்கப்படவும், டெல்லி மற்றும் திருச்சி வருமானவரி அலுவலகம், மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM ஏலீம் சிறுவர் இல்லம் கட்டடப்பணிகள் தொடர்ந்து நடைபெறவும்,. சமுகநலத்துறை ஆணையிட்டுள்ள சகல கட்டடப்பணிகளும் ஜுன் 30க்குள் முடிவடையவும், பொருளாதார தேவை சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

TVGM சமூக சேவை அங்கீகாரம் திருச்சி, குண்டல் ஆகிய 2 சிறுவர் இல்லத்திற்கும் கிடைக்க ஜெபியுங்கள்.

**சனி:** TVGM டிரஸ்ட்டுக்கு FCRA ஆர்டர் நிரந்தரமாக கிடைக்க ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TASOL டிரஸ்ட்டுக்கு நல்ல ஆலோசகர்கள், தரிசனம் பெற்றவர்கள், ஜெபப் பங்காளர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஏற்ற நேரத்தில் கர்த்தர் கட்டளையிட ஜெபியுங்கள்.

TASOL நிலத்திற்கு தேவைப்படும் பொருளாதாரங்கள் அற்புதமாக சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

## விசேஷ ஜெபக்குறிப்பு

**நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்திற்கு சேவையாளர் தேவை!**

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களுடைய வீடுகளுக்கு இரண்டு இரண்டுபேராக சென்று ஜெபித்து, கிராம ஊழிய வளர்ச்சிக்காக உண்டியல் மற்றும் காணிக்கைகளை சேகரித்து, TVGM சார்பில் ரசீது கொடுத்து அவர்கள் தேவைகளுக்காக ஜெபித்து, ஆசீர்வதித்து வர பெண்கள் தேவை. ஊழியத்தில் பயிற்சி பெறவும், அனுபவம் பெறவும் வாஞ்சையுள்ள இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் கிடைக்க ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

**100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )**
**பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-**


**MR.STEPHEN CHRISTOPHER,**
**MANAGING DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

**STD Ph : 0- 431 - 2607241**
**FAX : 0- 431 - 2607446**
**CELL Bro.Stephen : 94871 92763**
**Bro.P.T Christopher : 94435 44628**
**Email : 100village@tvgm.org**


***Website :***
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், **'100 கிராம ஊழியம்'** அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

**டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.**

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** ( 80G வரிவிலக்கு உண்டு)
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி )
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

**( அல்லது )**

**MR. STEPHEN CHRISTOPHER,**
**SB A/c No:12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.**
**இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

நாம் ஒருமித்து தேவனுடைய நாமத்தை உயர்த்துவோமாக!
சங்கீதம் 34: 3

To . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . .

**மீண்டும் அன்புடன் அழைக்கிறோம்!**

**வாருங்கள் ! மணமக்களை ஆசீர்வதியுங்கள்!**

TVGM & TASOL Managing Trustee

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்** MSW. M.A.Missions ( U.S )

**பெர்சிஸ் ஹேமலதா** B.Tech.,

திருமண நாள் : 28 . 05. 2010 வெள்ளி மாலை 5.00 மணி
நடைபெறும் இடம் : தூய ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயம்,
224, கதீட்ரல் ரோடு, சென்னை – 86.
( அண்ணா ஓவர் பிரிட்ஜ் சமீபம் - அமெரிக்கன் எம்பசிக்கு பின்புறம் )

**மணமகன் இல்ல வரவேற்பு நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| நாள் : 30.05. 2010 ஞாயிறு<br>நேரம்: மாலை 6.30 மணி<br>இடம் : ரோஸன் மஹால்,<br>மத்திய பேருந்து நிலையம்,<br>திருச்சி. | நாள் : 05 . 06. 2010 சனி<br>நேரம் : மாலை 6.30 மணி<br>இடம் : கலிலேயா காம்பவுண்ட்,<br>கோடாவிளை மெயின் ரோடு,<br>திசையன்விளை. நெல்லை மாவட்டம். |

தொடர்பு : 0431- 2607241, 94435 44628, Email : ptc@tvgm.org

தங்கள் நல்வரவை விரும்பும்:

P.T. கிறிஸ்டோபர் குடும்பம்
TVGM குடும்பம்

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

REG. NEWS PAPER R.N.I. Number :
TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY
ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி